# ஐக்கிய ஜெபம்

**மே-ஜூன் 2015 பதிப்பு**

## ஜெப மடல்

### அ. ஜெபத்தில் தாங்க வேண்டிய முகாமையான நிகழ்வுகள்

| எண் | நிகழ்வு | திகதி | முக்கியப்படுத்தப்படுபவை |
|---|---|---|---|
| 1 | நாடாளுமன்ற அமர்வு | மே 18 முதல் ஜூன் 16 வரை | நாடாளுமன்ற அமர்வு 16 நாள்களுக்கு மீண்டும் இடம்பெறும். அதில் குறிப்பிடத்தக்கவை<br>1. மே 21ல் சமர்ப்பிக்கப்படும் 11வது மலேசிய திட்டம்<br>2. தனியார் பிரிவில் தாக்கல் செய்யும்ஹூடுட் சட்டம் கடந்த முறை தள்ளிப்போனாலும் இம்முறை விவாத பட்டியலில் இடம்பெறுகிறது.<br>3. ஆள்கடத்தல் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான திருத்த மசோதாவும் விவாதத்திற்கு வருகிறது |
| 2 | பாஸ் கட்சி தேர்தல் | ஜூன் 3 முதல் ஜூன் 6 வரை | பாஸ் கட்சி கோலசிலாங்கூரில் நடைபெறவுள்ள தனது 61வது கட்சி தேர்தலை குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நடத்தவுள்ளது. உலாமா பிரிவினர் தங்களது பலத்தை நிரூபித்து எதிர்காலத்தை நிர்ணயிக்க முயன்று வருகிறார்கள். |
| 3 | அறுவடை பண்டிகைகள் | மே 30 முதல் ஜூன் 2 வரை | ”கெஅமாத்தான் பண்டிகை” சபாவில் மே 30-31களிலும், ”காவாய் பண்டிகை” சரவாக்கில் ஜூன் 1-2 லும் நடைபெறும். |

### ஆ. ஜெபக்குறிப்புகள்

1. **நாடாளுமன்ற அமர்வு**

அ. விவகாரமான சிக்கல் கொண்ட சட்டங்கள் அவசரமாக அல்லாமல் அவை நாட்டை ஆளக்கூடிய சட்டங்களாகக் காணப்படுவதால் போதுமான கால அவகாசத்துடன் கனத்துடனும் மரியாதையுடனும் நிறைவேற்றப்பட ஜெபி.

ஆ. அரசாங்க சார்பில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் நேர்த்தியான குறைபாடுகளை அடையாளங்காணவும், எதிர்க்கட்சிகள் குற்றம் கண்டுபிடிப்பதையே நோக்கமாகக் கொண்டிராமல் நல்ல ஆலோசனைகளைக் கூறவும் ஜெபி.

# ஐக்கிய ஜெபம்

**2. 11வது மலேசியத்திட்டம்**

அ. 2016 முதல் 2020 வரையிலான மலேசிய மேம்பாட்டுத் திட்டத்தில் 11வது மலேசியத்திட்டம் இறுதி பகுதியாக இருக்கிறது. அதாவது வறுமை ஒழிப்பு, கல்வி, பாதுகாப்பு, பொது போக்குவரத்து மற்றும் கிராம மறுசீரமைப்பு.

ஆ. கல்விக்கொள்கையில் தொழிற்கல்வி, மற்றும் நடைமுறைப்பியிற்சிப்பாடத்தில் கவனம் செலுத்தப்படும்.

இ. அரசாங்கம் இவற்றில் முழுமூச்சுடன் செயல்பட:-

- எல்லா நிலைகளிலும் உள்ள இன பாகுபாடு மற்றும் நியாயமற்ற ஒதுக்கீடுகள் களையப்பட

- அமைப்பினை திருத்தி அமைப்பது, ஊழலை குறைப்பது, உடைசல்களை நிவர்த்தி பண்ணுவது மற்றும் போட்டி ஆற்றலை மேம்படுத்துவது.

- அரசாங்கள் சமர்ப்பிக்கும் திட்டங்களில் குறை நிறைகளை கண்டறியவும் நன்கு விவாதம் செய்யவும் போதுமான கால அவகாசம் வழங்க.

  நாடாளுமன்ற எதிர்க்கட்சிகள் உறுப்பினர்கள் கொண்டுவரும் நேர்த்தியான குறை நிறைகளை அரசாங்கம் கவனத்தில் கொள்ள.

**3. தனியார் பிரிவில் தாக்கல் செய்யும் ஹூடுட் சட்டம் விவாதத்திற்கு வர எதிர்பார்க்கப்படுகிறது**

.

அ. பாஸ் ஆட்சி செய்யும் கிளந்தான் மாநிலம், ஷரியா குற்றப்பிரிவு சட்டத்தை மாநில அளவில் ஹூடுட் சட்டமாக பிரகடனம்பண்ண எதிர்க்கட்சியான அம்னோ உறுப்பினர்களின் ஆதரவோடு கடந்த மார்ச் 19ல் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் தனியார் பிரிவில் தாக்கல் செய்யப்பட்ட ஹூடுட் சட்ட பிரேரணை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இந்த அமர்விலும் அது தாக்கல் செய்யப்படாமலேயே இருக்க ஜெபி.

ஆ. கூட்டரசு அரசியலமைப்பு சட்டத்தையே மாற்றி அமைக்கும் வண்ணம் ஷரியா சட்டம் அமுலாக்கம் காண முயற்சி செய்யும் அனைத்து வஞ்சக திட்டங்களுக்கு எதிராக ஜெபி.

**4. பாஸ் கட்சித் தேர்தல்**

அ. பாஸ் கட்சியின் தேர்தல் அதின் எதிர்கால முடிவுகளைத் தீர்மானிக்கும். அதாவது பாக்காத்தானுடன் தொடர்ந்து இணைந்து செயல்படுமா அல்லது தனக்கென ஒரு வழியை வகுத்துக்கொள்ளுமா அல்லது 1978களில் சேர்ந்திருந்தபோது நம்பிக்கை துரோகம் செய்த அம்னோவுடன் இணையுமா என்பது கேள்விக்குறி. இறுதி நிலவரப்படி உலாமா பிரிவினரின் செல்வாக்கு, மத்திய செயவையில் ஆதிக்கம் செலுத்தும் நிலை வருமானால் மேம்பாட்டை இன்னும் பின்னுக்குத்தள்ளும்.

ஆ. கீழ்க்காணும் குறிப்புகளுக்காக ஜெபி

- தீவிரவாதம் எனும் கொள்கையில் இன்று சிந்தனை வன்முறையினால் இஸ்லாமிய உலகம் முரண்பிடித்துக்கொண்டிருக்கிறது. இந்தக்கட்சியில் மிதவாத மற்றும் ஞானம்

நிறைந்த தலைவர்கள் தீர்மானம் எடுக்கும் மத்திய செயலவையில் இடம்பெற ஜெபி.

- முஸ்லிமின் வலுவான ஆதரவைப்பெறுவதற்காக மத துவேஷங்களை பயன் படுத்துவதை தவிர்க்கும் புதிய தலைவர்கள் தோன்றி நாட்டை மேம்பாட்டுப் பாதையில் வழிநடத்திச் செல்லும்படி ஜெபி.

- அம்னோ மற்றும் பாஸ் கட்சிகளுக்கிடையில் நடைபெறும் போட்டியில் மத தீவிரவாதம் மேலோங்கி நாட்டை பாதுகாப்பதிலிருந்து தவறாதிருக்கும்படி தேவன் இவர்கள் மத்தியில் கிரியை செய்ய ஜெபி.

**5. பாஸ்/அம்னோ கட்சி இணைப்பின் ஆபத்து**

அ. நிக் அஸீஸ் அவரின் மறைவுக்குப்பின்னர் மலாய் மற்றும் இஸ்லாமிய ஒன்றிணைப்பை மேம்படுத்த பாஸ் கட்சிக்கு அம்னோ விடுக்கிற அழைப்பின் நோக்கம் நமது அடிப்படை அரசியலமைப்பின் சட்டத்தையே மாற்றியமைக்கும் தீங்கு கொண்டதாக முடியுமாதலால் அத்தகைய அசைவு தகர்க்கப்பட ஜெபி.

ஆ. ஹூடுட் சட்டம் கிளந்தான் மாநிலம் வழி பாஸ்/அம்னோ கூட்டு முயற்சியில் செய்யப்படும் வஞ்சக திணிப்பு தோல்வியில் முடிய ஜெபி. முஸ்லிம் அல்லாத சிறுபான்மை இனத்தவர் மற்றும் அவர்களுக்குள்ளேயே காணப்படும் இஸ்லாமிய சிறுபான்மையினரின் நலனும் அரசியல் உரிமைகளும் தேய்ந்து போகாதபடி காக்கப்பட ஜெபி.

**6. அரசியல் மற்றும் பொருளாதார விவகாரங்கள்**

அ. நீதியும் நியாயமும் இந்த நாட்டில் நிலைத்திருக்க ஜெபி

ஆ. அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கும் 1எம்டிபியில் நடந்துள்ள முறைகேடுகளினால் நிலைத் தடுமாறும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அமளி, ஜி.எஸ்.டி.யினால் எழுந்துள்ள குழப்பங்கள், இந்நாள் மற்றும் முந்நாள் பிரதமர்களின் மோதல், இவற்றினால் எவ்வித அரசியல் பாதகங்களும் வெளிப்படாமல் சுமூக தீர்வு காணப்படவும் ஜெபி.

இ. தீவிரவாதம் தலைவிரித்தாடல், உரிமைகள் பறிக்கப்படுதல்,இவற்றிற்கு எதிராக மிதவாத மலேசியர்கள் குரல் கொடுக்கவும், ஆளுமை மற்றும் கணக்கொப்புவிக்கும் உத்தரவாதம் மேலோங்க கோருபவர்களும் எழும்ப ஜெபி.

ஈ. சவால் மிக்க அனைத்துலக மற்றும் உள்நாட்டு பருவ மாற்றத்தில் நமது தேசத்தின் வளங்கள் பாதுகாக்கப்பட ஜெபி.

**7. சபா மற்றும் சரவாக் மாநிலத்தின் பண்டிகைகள்**

அ. ”காவாய்” மற்றும் ”கெஅமானாத்தான்” பண்டிகைகளை கொண்டாட தங்கள் மாநிலங்களுக்குத் திரும்பிச்செல்லும் சபா சரவாக் குடிமக்களுக்களின் சுகப்பிரயாணங்களுக்காக ஜெபி. குடும்பங்கள் மறுபடியும் இணையவும், உறவுகள் சீர்பொருந்தவும், தங்கள் ஐக்கிய நேரத்தில் மகிழ்ந்திருக்கவும் ஜெபி. இக்காலக்கட்டத்தில் கிறிஸ்தவர்கள் முன்மாதிரியாகவும் உப்பாக, ஒளியாக திகழவும் ஜெபி. மதுபானப்பிரியத்தின் விளைவால் வரும் ஏழ்மை, குடிப்பழக்கம், சமூக சீர்கேடுகள்,

குற்றச்செயல்கள் இவற்றிலிருந்து இந்த வாலிபர்கள் விலகியிருக்கவும், பேய்த்தனத்தில் சிக்காதபடி அறுவடை சடங்குகளில் ஈடுபடாதபடிக்கும் இருக்க ஜெபி.

ஆ. பூர்வீக சபைகள் தங்கள் ஆவிக்குரிய முதிர்ச்சியில் தொடர்ந்து வளரவும், தேசத்திற்கு ஆசீர்வாதமாக இருக்கவும் ஜெபி. இன்னும் அதிக போதகர்கள், தலைவர்கள் தேவ வார்த்தையில் பலப்பட்டு அடுத்த தலைமுறைக்கு கற்றுத்தரவும் ஜெபி.

4. **ஆள்கடத்தல் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான திருத்த மசோதா சட்டம் 2015**

அ. ஆள்கடத்தலுக்கு எதிரான சட்டம் பலகாலமாய் நிலுவையில் உள்ளது. இந்த திருத்தங்கள் ஆள்கடத்தல் விவகாரங்களில் பல்வேறு ஆக்கக்கூறுகளை கொண்டுவராமலும், குடிநுழைவுத்துறையில் காணப்படும் அதிகார துஷ்பிரயோகங்களை சரிவர களையவும் ஜெபி.

ஆ. காவல்துறை, குடிநுழைவு மற்றும் கடற்படையினர் அரசாங்க ரீதியில் அகதிகள் மற்றும் குடியேறிகளை முறையாக நடத்தவும், மலேசியர்கள் ஆள்கடத்தலுக்கு எதிராக முழுமையாக ஒப்புக்கொடுக்கவும் ஜெபி.

இ. குடியேறிகள், அகதிகள் பாதுகாப்பிற்கும் குறிப்பாக பத்திரங்கள் இல்லாத அவர்களுடைய பிள்ளைகளின் கல்வி வாய்ப்பு பறிக்கப்படுவதிலிருந்தும் காப்பாற்றப்பட ஜெபி.

ஈ. தென் தாய்லாந்து ஆள்கடத்தல் முகாமில் நடைபெறும் கடத்தப்பட்டவர்களுக்கு எதிராக நடைபெறும் அராஜகங்கள் நீங்கப்பட ஜெபி. அனைத்து தீங்கான செயல்கள் வெளிப்படவும் முழுமையாக நிலைவரப்படவும், தேசங்கள் கருணை காண்பிக்கவும் ஜெபி.

இ. ஐக்கிய நாடுகளின் விதிமுறைப்படி தரை, கடல், ஆகாய மார்க்கமாக செய்யப்படும் குடியேறிகள் ஆள்கடத்தல் முறியடிப்புக்கு எதிரான தீர்மானத்தை நமது மலேசிய நாடு செல்லத்தக்கதாக ஒப்புதல் அளிக்க ஜெபி.